இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,396, AUGUST 5, 1910.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Tender for Arrack Rents, 1911-12.]

## சாராயக்குத்தகை அறிவித்தல்.

இத்தால் அறியத்தருவது என்னவாகில்:—1911 ம் ஆண்டு ஜனவரிமாதம் 1 ந் திகதி முதல் 1912 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ந் தேதிவரையும் ஆகிய பதினெட்டு மாசகாலத்துக்கு இதன்பின்னால் வரும் சாராயக்குத்தகைகளை விலைக்குக் கொள்வனவு பண்ணுவதற்கான கேள்விப்பத்திரங்களைத் திறந்து யோசித்துப்பார்க்கும் நிமித்தமாக, மந்திரசபை மண்டபத்திலே, இதன்பின்னால் வரும் நாட்களிலே, உத்தம தேசாதிபதியவர்களால் நியமிக்கப்பட்ட ஒரு போட் சமாஜங் கூடப்பெறும்:—

1910 ம் வருஷம் ஆகஸ்ற் மீ 19 ந் உ.

| | | | |
|---|---|---|---|
| 1. | மேற்கு மாகாணம் | .. | கொழும்பு டிஸ்திறிக் பிரிவு. |
| 2. | ஷை | .. | களுத்துறை ஷை |
| 3. | ஷை | .. | மாணத்துறை ஷை |
| 4. | சப்பிரகாம மாகாணம் | .. | இரத்தினபுரி ஷை |
| 5. | ஷை | .. | மூன்று கோறளையும் இறை புலத்கமவும். |
| 6. | ஷை | .. | கேகாலை டிஸ்திறிக்கிலுள்ள நாலு கோறளை. |

1910 ம் வருஷம் ஆகஸ்ற் மீ 26 ந் உ.

| | | | |
|---|---|---|---|
| 1. | மேற்கு மாகாணம் | .. | சியனக்கோறளையும் ஹேவாகம்கோறளையும். |
| 2. | ஷை | .. | நீர்கொழும்பு டிஸ்திறிக் பிரிவு. |
| 3. | மத்திய மாகாணம் | .. | முழு மாகாணமும். |
| 4. | தென் மாகாணம் | .. | காலி டிஸ்திறிக் பிரிவு. |
| 5. | ஷை | .. | மாத்துறை அம்பாந்தோட்ட டிஸ்திறிக் பிரிவுகள். |

1910 ம் வருஷம் செப்தெம்பர் மீ 2 ந் உ.

| | | | |
|---|---|---|---|
| 1. | வடமேற்கு மாகாணம் | .. | (குருநாக்கல் பிரிவில்) ஏழு கோறளை. |
| 2. | ஷை | .. | சிலாப டிஸ்திறிக் பிரிவு. |
| 3. | ஷை | .. | புத்தளம் ஷை |
| 4. | ஊவா மாகாணம் | .. | வதுளை ஷை |
| 5. | வடமத்திய மாகாணம் | .. | அநுராதபுர ஷை |

1910 ம் வருஷம் செப்தெம்பர் மீ 9 ந் உ.

| | | | |
|---|---|---|---|
| 1. | வட மாகாணம் | .. | யாழ்ப்பாண டிஸ்திறிக் பிரிவு. |
| 2. | ஷை | .. | மன்னார் ஷை |
| 3. | ஷை | .. | முல்லைத்தீவு ஷை |
| 4. | கிழக்கு மாகாணம் | .. | மட்டக்களப்பு ஷை |
| 5. | ஷை | .. | திருக்கோணமலை ஷை |

நியமித்த நாளில் மத்தியானம் பன்னிரண்டரை மணிக்குப்பிறகு யாதொரு றெண்டர் கேள்விப்பத்திரமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கேள்விக்காரன் ஒவ்வொருவனும் தான் கொடுக்க ஆயத்தமாயிருக்கிற விலை இன்னதென்று தனது கேள்விப்பத்திரத்திற் சொல்லவேண்டும்.

மேற்காட்டியிருக்கிறபடியான சகல குத்தகைகளுக்கும் தனித்தனி வெவ்வேறு கேள்விப்பத்திரம் போடவேண்டும்; கேள்விப்பத்திரத்திற் குத்தகையினது பேரும் நம்பரும் ஆகிய இரண்டும் எழுதியிருக்கவேண்டும்.

சரியாகச் சீல் முத்திரை வைத்த கேள்விப்பத்திரங்களை, "சாராயக்குத்தகைக் கேள்விப்பத்திரம்" என்று அடையாளமிட்டுக் கௌரவ அக்றிங் கலோனியல் சக்கிறத்தார் ஏச். எல். குறோவ் ஸீ.எம்.ஜீ. யவர்களுக்கென்று மேல்விலாசமிட்டு தபால் மார்க்கமாக அனுப்பினும் அனுப்பலாம் அல்லது கேள்விக்காரன் தானே போட் சமாஜத்தாருக்கு நேரே முகமுகமாய்க் கண்டு கொடுக்கலாம்.

விற்பனவுக் கொந்தீசு மாதிரித்தாள்களையும் தவறணை இடாப்புக்களையும் இலங்கையிலுள்ள எந்தக் கச்சேரியிலேனுங் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிகம் ஏதும் சங்கதி அறியவேண்டுமானால் கௌரவ கொன்றி ஜேனலர், அவ் றெவெனியூத் துரையை நேரே கண்டு கேட்டாலும் அவருக்குக் காகிதம் எழுதினாலும் அவர் அறிவிப்பார்.

இங்கிலீஷ் பேச இயலாத கேள்விக்காரர்கள் போட்சமாஜத்தோடு பேசிக்கொள்ள விரும்பினால் தங்கள் தங்கள் துவிபாஷகரைக் கூட்டிவரவேண்டும்.

சட்டநிரூபண்சபை மண்டபத்தில் கேள்விக்காரன் நேரே தானேயாவது தனது அதிகாரம்பெற்ற காரியஸ்தர் மூலமாயாவது, வந்திருந்து தனது கேள்விப்படி ஒரு மாசக் குத்தகைப்பணத்தை உடன்கையிலே கட்டவும் ஆயத்தமாயிருந்தாலன்றி, யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

இரண்டுக்குக் குறையாத கேள்விப்பத்திரங்கள் ஒரே சமமான தொகையைக் கேட்டிருக்கும் பக்ஷத்தில், போர்ட் சமாஜத்தார் தமது இஷ்டப்படி இரண்டில் ஒன்று செய்யலாம்; (க) அந்தக் குறித்த கேள்விக்காரர்கள் மாத்திரமே விலை வைத்துக் கேட்கிற பிரசித்த ஏலத்தில் உடன்கையிலேதானே போட்டுக் குத்தகையை விற்பது; அல்லது, (உ) புதுக் கேள்விப்பத்திரங்கள் கேட்டு வாங்குவது.

அதிக உயர்ந்த கேள்வியையாவது எந்தக் கேள்வியையாவது ஏற்பதற்கு போர்ட் சமாஜத்தார் கடமைப்பட்டவர்களல்ல.

இந்தக் குத்தகைகளை விலைக்குக்கொண்டவர்கள், ஒரு கலனுக்கு நாலரை ரூபாவுக்குக் குறையாத எந்த விலைக்கும் விற்பனவுசெய்ய இடங்கொடுக்கப்படுவோர்கள்.

மேலும் இத்தால் அறியத்தருவது என்னவெனில்:—

(கோட்டை புறநீங்கலாக) கொழும்பு நாலு கடவத்தைச் சாராயக் குத்தகையையும், மத்திய மாகாணத்துச் சாராயக் குத்தகையையும், காலி நாலு கடவத்தைச் சாராயக்குத்தகையையும் விலைக்குவாங்கினவர்கள், கொழும்பு கண்டி காலிகளின் முனிசிப்பல் நகரசங்க எல்லைகளினுள்ளே உள்ள ஒவ்வொரு தவறணையிலும் சாராயம் சில்லறையில் விற்பதற்காக 1891 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின்படி கொடுக்கும் ஒவ்வொரு லைசென்ஸ் பத்திரத்துக்குமாக ஐந்நூறு ரூபா முத்திரை வரி 1892 ம் ஆண்டின் 9 ம் இலக்கச்சட்டத்து ஏற்பாடுகளின்படி இறுக்கவேண்டியவர்களாவர் என்பதாம்.

கொன்றிரோல்லர் அவ் றெவனியூக் கந்தோரில் நேரேயாவது காகிதம் எழுதியாவது கேட்டு விலையில்லாமல் இனுமாகக் கேள்விப்பத்திர மாதிரிகள் பெற்றுக்கொள்ளலாம்.

உத்தமனுர் கட்டளைப்படி,

கொழும்பிற், கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர், — எச். எல். கிறேவோட்,
1910 ம் ஸ்ரீ ஜூலை 21 க உ. — அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

---

[By-laws relating to Milk, Municipality of Colombo.]

அறிவித்தல்.

நகரசங்கத்தைப்பற்றிய 1887ம் ஆண்டினது 7 ம் கட்டளைச்சட்டத்து (1901 ம் ஆண்டின் 8 ம் கட்டளைச்சட்டத்தின்படி திருத்திய பிரகாரம்) 124 ம் பிரிவில் 1 ம் கீழ்ப்பிரிவினால் மேன்மைதங்கிய தேசாதிபதியவர்கள் தமக்குக் கையளித்த தத்துவத்தைச் செலுத்தி மந்திர ஆலோசனைச் சங்கத்தாரின் அனுமதியுடன் கொழும்பு நகரசங்கத்தாரால் உண்டுபண்ணப்பட்ட பின்சொல்லிய துணைப்பிரமாணத்தை உறுதிப்படுத்தச் சித்தமானுரென்றும் 1905 ம் ஆண்டு அற்பசி மீ 20 ந் திகதியின் 6,080 ம் இலக்க "கெசற்" பத்திரிகையில் பிரசுரப்படுத்தப்பட்ட 1 ம் அதிகாரத்தின் 8 ம் இலக்கத் துணைப்பிரமாணத்துக்கு பதிலாக அது வைக்கப்பட்டதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேன்மைதங்கிய தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,

கொழும்பு, கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர், — எச். எல். கிறேவ்வோட்,
1910 ம் ஸ்ரீ ஜூலை 25 க உ. — கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

குறிக்கப்பட்ட துணைப்பிரமாணம்.

முன்சொல்லிய துணைப்பிரமாணங்களினது ஏற்பாடுகளின் தத்துவத்தைக் கொண்டு எடுக்கப்பட்ட பாலின் மாதிரியாதொரு மாதிரி கலக்கப்பட்டதென்று அத்தாட்சிபண்ணப்பட்டால் அதை விற்க வைத்திருக்கிறபேர் குற்றத்துக்குள்ளாவான் அவ்வித பேர் விற்கிறவன் அல்லது பால் சொந்தக்காறனின் ஊழியத்திலிருக்கிறவன் அல்லது அவனுக்குப் பதில் வேலைசெய்கிறவனுயிருந்தால் அப்பொழுது அவ்வித பேரும் பால் சொந்தக்காறனும் ஒரு குற்றத்துக் குள்ளாவார்கள்.

---

[Amended By-laws, relating to Public Markets, Municipality of Kandy.]

1901 ம் ஆண்டின் 8 ம் கட்டளைச்சட்டத்தினுல் திருத்திய 1887 ம் ஆண்டின நகரசங்கங்களைப்பற்றிய சட்டத்தின் 124 ம் பிரிவின் (1) ம் கீழ்ப்பிரிவினுல் தம்மிடத்தில் வைத்த தத்துவங்களைச்செலுத்தியும் அதிகார மந்திரசபையின் ஆலோசனையோடும் 1906 ம் ஆண்டு மார்கழி மாதம் 18 ந் தேதி பிரசித்தப்படுத்தப்பட்ட துணைப்பிரமாணங்களுள் XIX, A ம் அதிகாரத்தைக் கண்டி நகரசங்கத்தவர்களால் பின்வரும் டாப்பில் காண்கிறபடி செய்யப்பட்ட துணைப்பிரமாணங்களை, உத்தம தேசாதிபதியவர்கள் சித்தங்கொண்டு உறுதிப்படுத்தியிருக்கிறுரென்பதை இத்தாற் தெரிவிக்கப்படுகின்றது.

இராசாங்க லிகிதர் கந்தோர், — மகோத்தமர் அவர்களின் கட்டளைப்படி,
கொழும்பு, 1910 ம் ஸ்ரீ ஜூலை 30 க உ. — எச். எல். கிறேவோட், எக்றிங் இராசாங்க லிகிதர்.

இடாப்பு.

கண்டி நகரசங்கத்துத் துணைப்பிரமாண 6 ம் அதிகாரத்தின் கூட்டலும் திருத்தலும்.

பிரசித்தப்படுத்தப்பட்ட 64 க்குப்பதிலாக பின்வருந் துணைப்பிரமாணத்தைச் சேர்ப்பதால்—

64. உத்தரவுச்சீட்டிற் சொல்லப்பட்டவையே அல்லாது வேறு சாமான் விற்கப்படாது.—பிரசித்த மார்க்கட்டில் தனக்குக் கிடைத்த உத்தரவுச்சீட்டில் அல்லது டிக்கற்றிற் குறிக்கப்பட்ட சாமானே அல்லாது வேறொன்றையும் வைத்திருக்கவும் விற்கவும்படாது.

72 ம் துணைப்பிரமாணத்துக்குப் பின்னும் பின்வரும் துணைப்பிரமாணத்தைக் கூட்டுதலினுல்.—

72a. அவரவர் கடை யல்லது இடத்தின் எல்லைகடந்து இடம்பிடித்தல் விலக்கப்பட்டிருக்கின்றன.—மார்க்கட்டில் கடையையாவது இடத்தையாவது பாவிக்கு மெவனுவது அக்கடையில் அல்லது இடத்தில் விற்க வைக்கப்பட்டிருக்குஞ் சாமான்கள் எல்லைக்கப்பால் மீறிப்போகக் கூடியதாய் விற்கவாவது அல்லது வேறு நோக்கமாயாகுதல் சாமான்களை அப்படி வைத்தலாவது வைக்கவிடுதலாவது கூடாது.

72b. தெருவீதிகளைத் தடைபண்ணுது வைத்தல்.—மார்க்கட்டை அல்லது சந்தையைக்குத்தகையாயெடுத்திருப்பவனுவது அல்லது கடைவைத்திருக்குஞ் சொந்தக்காறனுவது பாவிப்பவனுவது அல்லது கடைக்காரனுவது அம்மார்க்கட்டிலிருக்குந் தெரு வீதி வழி பாதை முதலியவைகளில் சாமான் கட்டு முதலியவைகளை விற்பனவுக்கு வைப்பதாலாவது அல்லது அங்கு வித்துவைப்பதாலாவது அல்லது விற்பனவுக்கு வைக்க அல்லது குவிக்க இடங்கொடுப்பதாலாவது அப்பாதை முதலியவைகளில் போக்குவரவு செய்வதைத் தடைசெய்யாதிருத்தல் வேண்டும்.

*பிரசித்தஞ்செய்யப்பட்ட 73 க்குப் பதிலாகப் பின்வரும் துணைப்பிரமாணங்களைச் சேர்ப்பதால்.—*

73. *எனவுகள்.—பிரசித்த மார்க்கட்டில் இருக்கும் கடைக்கு அல்லது இடத்துக்கு உத்தரவு அல்லது அண்டு எடுத்திருக்கு மொவ்வொருவரும் அக்கடை அல்லது அவ்விடத்தில் அல்ல தலைக் கருகாமையாய்க் குப்பை கூளத்தைப் போடுகிறதற்கு நகரசங்கத்தலைவர் அங்கீகரிக்கும் எனம் ஒன்று வைத்தல் வேண்டும்.*

*பிரசித்தஞ் செய்யப்பட்ட 82e க்குப் பதிலாகப் பின்வருந் துணைப்பிரமாணத்தைச் சேர்ப்பதால்—*

82e. *ஒழுங்கீனமாய் நடப்பது.—இயாதொரு பிரசித்த மார்க்கட்டில் அல்லது அதைச்சேர்ந்த இடத்தில் ஒழுங்கீனமாய் நடப்பது பிச்சைகேட்பது அல்லது யாதொரு அசங்கிர்த்தஞ் செய்வது.*

*பிரசித்தஞ் செய்யப்பட்ட 82h க்குப் பதிலாகப் பின்வரும் துணைப்பிரமாணத்தைச் சேர்ப்பதால்—*

82h. *தொற்றுநோயுள்ள யாதாமொருவரும் மார்க்கட்டில் அல்லது கடையில் அல்லது அங்குள்ள இடங்களில் இருத்தல் கூடாது.—தொற்றுநோய் அல்லது அருவருப்புள்ள நோயில் வருந்து மெவராவது பிரசித்த மார்க்கட்டிலாவது, பிரசித்தமில்லாத மார்க்கட்டிலாவது அங்குள்ள கடை அல்லது இருப்பிடம் அல்லது இடங்களைப்பாவித்தல் அல்லது மார்க்கட்டில் சாமான் விற்றல், மார்க்கட்டிலாவது நகரசங்க எல்லைக்குளிருக்கும் எந்த ரோட்டிலாவது எந்தச் சாமானையாவது விற்கக் கொண்டுபோகுதல், அப்படி நோயுடைய எவனையும் பிரசித்த மார்க்கட்டிலாவது வேறெந்த மார்க்கட்டிலாவது வேலைக்காரனாக யாதாமொருவரும் வைத்திருத்தல் கூடாது, அப்படி நோயுடையவன் யாதாமொரு மார்க்கட்டுக்குள் பிரவேசித்தலுங் கூடாது, அப்படி நோயுடையவன் அப்படிப் பிரவேசிப்பானாகில் அவனை வெளியே துரத்திவிடலாம்.*

*பிரசித்தஞ் செய்யப்பட்ட 88 க்குப் பதிலாக பின்னால் பின்வருந் துணைப்பிரமாணங்களைச் சேர்ப்பதால்—*

88a. *நெருப்பு வெளிச்சம் முதலியவை.—மார்க்கட்டில் கடைவைத்திருக்கும் அல்லது வேறு கட்டிடத்தை வைத்திருக்கும் ஒவ்வொருவரும், அல்லது அதில் வசிக்கு மொவ்வொருவனும அல்லது அவர்களின் வேலைக்காரர் ஒவ்வொருவரும் அக்கடையில் அல்லது கட்டிடத்திலுள்ள நெருப்பு வெளிச்சமெல்லாம், நூற்றுப்போட்டு அல்லது நூர்ப்பித்துப்போட்டே அவ்விடத்தைவிட்டுப் போதல்வேண்டும். அக்கட்டிடம் அல்லது கடைக்கு மோசம் வருவிக்கக்கூடிய நெருப்பு வெளிச்சம் முதலியவை அவ்விடங்களில வைக்க உத்தரவு கொடுக்கப்பட மாட்டாது.*

88b. *மார்க்கட்டில் ஒழுங்கீனமாயிருப்பவர்களைத் துரத்தல்.—மார்க்கட்டுகளில் குடித்துப்போட்டு நிற்கும், அல்லது பிச்சைகேட்கும் அல்லது வீணிலே திரியும் அல்லது ஒழுங்கீனமாய் நடக்கும் அல்லது பைத்தியம் பிடித்திருக்கும் எவராவது காணப்பட்டால், அப்படிப்பட்டவரை யெல்லாம் அம்மார்க்கட்டுப் பாதுகாவலராவது அல்லது நகரசங்கத்தலைவரது அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தராவது அம்மார்க்கட்டினின்றும் வெளியே துரத்திவிடலாம். அப்படி ஒழுங்கு தப்பி நடக்கிறவர் அம்மார்க்கட்டைக் குத்தகைக் கெடுத்தவனுனால் அல்லது அவனது வேலைக்காரனுயிருந்தால், அம்மார்க்கட்டுக்கடை சாய்ப்பு முதலியவைகளில் அவன் அதன்பின் வியாபாரஞ்செய்யாதபடி தடைசெய்யலாம். அப்படித் தடைசெய்தல் நகரசங்கத்தலைவர் அனுமதியுடன் செய்தல் வேண்டும்.*

*அம்மார்க்கட்டில் சண்டைசெய்யும், சாமான்விற்பவரெவரையும் அப்படிச் சண்டைசெய்ததின்பின் அம்மார்க்கட்டுக் கடை, சாய்பு முதலியவற்றில் வியாபாரஞ்செய்யாதபடி தடுத்துத் துரத்திவிடலாம்.*

---

# LAND SALES.

## *காணி விற்பனவுகள்.*

No. 1,245, E. P.—1910 ம் *ஆண்டு பிரட்டாசிமாதம்* 15, *ந் திகதி வியாழக்கிழமை பகல்* 1 *மணிக்கு தன் ஆபிசில் கீழ் மாகாணத்து திருகோணமலை கவர்ன்மேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறிவிற்கப்படும்.* 18 *காணித்துண்டுகள், கீழ் மாகாணத்து திருகோணமலை டிஸ்திரிக்கின் கட்டுக்குளப்பற்று கிழக்கு, தம்பலகமம், கொட்டியாபுரம், திருகோணமலைப் பகுதிகளி லிருக்கின்றது.*

| *காணித்துண்டின் இல.* | *குறிச்சி.* | *கேள்விக்காரனின் பெயர்.* | *விவரம்.* | *விசாலம்.* ஏ. | று. | ப. | *தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு ரூ.* |
|---|---|---|---|---|---|---|---|
| | | | *பிளான் இல.* 4,179. *உரித்தாளி—அரசாட்சி.* | | | | |
| 208 | *குச்சவெளி* | *எஸ். நாகமுத்து* | *தென்னந்தோட்டத்துக்கேற்ற தரை* | 0 | 2 | 14 | 15 |
| 209 | *ஷை.* | *ஷை.* | *ஷை.* | 0 | 0 | 28 | 15 |
| | | | *பிளான் இல.* 4,133. | | | | |
| 94975 | *சின்னவெளியா* | *காசின்ன நேர்கு* | *தென்னந்தோட்டத்துக்கேற்ற தரை* | 8 | 0 | 24 | 16 |
| 94976 | *ஷை.* | *ஷை.* | *ஷை.* | 3 | 2 | 30 | 16 |
| 94977 | *ஷை.* | *கலந்தர் மீராசாய்பு* | *ஷை.* | 3 | 2 | 33 | 16 |
| 94978 | *ஷை.* | *திருமான உமறு* | *ஷை.* | 4 | 0 | 15 | 16 |
| 94980 | *ஷை.* | — | *ஷை.* | 0 | 3 | 24 | 16 |
| 94981 | *ஷை.* | — | *ஷை.* | 0 | 3 | 7 | 16 |
| 94982 | *ஷை.* | — | *ஷை.* | 0 | 3 | 12 | 16 |
| 94983 | *ஷை.* | — | *ஷை.* | 0 | 3 | 1 | 16 |
| 94984 | *ஷை.* | — | *ஷை.* | 0 | 2 | 0 | 16 |
| | | | *பிளான் இல.* 4,156. | | | | |
| 53 | *தம்பலகமம்* | — | *தென்னந்தோட்டத்துக்கேற்ற தரை* | 0 | 3 | 27 | 15 |
| 56 | *ஷை.* | *பி. கே. வயித்தீஸ்வர ஐயர்* | *ஷை.* | 30 | 3 | 29 | 16 |
| | | | *பிளான் இல.* 1,632. | | | | |
| 4736 | *மேன்காமம்* | *எஸ். சீ. மாணிக்கசெட்டி* | *தோட்டத்துக்கும் வயலுக்குமேற்ற தரை* | 20 | 1 | 36 | 20 |
| | | | *பிளான் இல.* 4,038. *உரித்தாளி—எஸ். இ. அப்துல் றகுல்.* | | | | |
| 94621 | *பாலையூற்று* | *எம். ஜே. செல்லையா* | *தோட்டத்துக்கேற்ற தரை* | 1 | 0 | 11 | 17·50 |
| 94622 | *ஷை.* | *ஷை.* | *ஷை.* | 0 | 1 | 32 | 17·50 |
| | | | *உரித்தாளி—அரசாட்சி.* | | | | |
| 94625 | *ஷை.* | *ஷை.* | *தோட்டத்துக்கேற்ற தரை* | 1 | 0 | 36 | 16 |
| | | | *உரித்தாளி—சவுரியல் அன்றே.* | | | | |
| 94631 | *ஷை.* | *ஷை.* | *தென்னந்தோட்டம்* | 0 | 3 | 23 | 15 |

*இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் திருகோணமலை உதவி ஏசன்றரிடத்திலும் படங்களைப்பற்றிய விபரங்கள் அளவைத்தலைவரிடத்திலுமிருந்து அறிந்துகொள்ளலாம்.*

*கலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,*
*கொழும்பில்,* 1910 *ம் ஆடி மீ* 26 *ந் உ.*

*எச். எல். குறூவ்வோட்,*
*கலோனியல் சக்கிறத்தாரின் வேலையார்ப்பவர்.*

( 2 )

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Local Board, Ratnapura District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம ஓர் தண்ணீர் ஓடும் கான் திறத்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 1,955. குறிச்சி—இரத்தினபுரி சுகாதாரசங்க எல்லைக்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| C 3 | இடகெ ெடதைதை | தோட்டம் | லாமஇத்தனுவும் மறுபேரும் | 0 | 0 | 3·25 |
| D 3 | பன்னியவத்தை | ஷை | யே. எவ். கிர்றலே | 0 | 0 | 3·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின பிரகாரம மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிதப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்தப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ புரட்டாசிமாதம் 1 ந் திகதியிலன்று 1 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மைமையும அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும உரித்துகளின தொகையையும விவரங்களையும சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1910 ம ௵ ஆடிமீ 28 ந் உ.

ஜி. குக்ஸன்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Local Board, Ratnapura District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஓர் தண்ணீர்ஓடும் கான் கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 1,954. குறிச்சி—இரத்தினபுரி சுகாதாரசங்க எல்லைக்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம, ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| Y 2 | மொகத்திவாவத்தை | தோட்டம் | மெஸ் போல் பீறிஸ் | 0 | 0 | 1·43 |
| E 2 | கெத்திகே அல்லது ஐம்புகாகவத்தை | ஷை | மெஸ் டபிள்யு. ஏ. கிறேப் | 0 | 0 | 6 |
| A 3 | கெத்திகேஓவிற்றவத்தை | ஷை | காலஞ்சென்ற மெஸ் ஸ்றிவாட்டின் உரித்தாளர் | 0 | 0 | 6 |
| B 6 | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 1·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிதப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1910 ம் ௵ புரட்டாதிமாசம 1 ந் திகதியிலன்று 1 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரில் என்முனபாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம சாதிக்கும் உரித்துகளின் தொகையையுக் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளபபடுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1910 ம ௵ ஆடிமீ 28 ந் உ.

ஜி. குக்சன்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Tangalla, Hambantota District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம பிரிவின் பிரகாரம் திரும்ப புதிதாய்க் கட்டப்படும் தங்கல் பப்ளிக்வர்க்ஸ் டிபார்ட்மென்ட் ஸ்டோர் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 9,055. குறிச்சி—தங்கல்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| M 3 | களகாவவத்த | தேங்காய் தோட்டம் | ஓ. எம். அப்தல்ஹமீத் ஹாஜியார் | 0 | 1 | 1·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிதப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ ஆவணிமாதம் 27 ந் திகதியிலன்று 12 மணிக்கு அம்பாந்தோட்டையில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பாந்தோட்டை கச்சேரி,
1910 ம் ௵ ஜூலைமீ 27 ந் உ.

எஸ். என். ஜூல்வ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

[Lindulla, Nuwara Eliya District.]

1876 ம் ௵-த்து 3 ம இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டிம்புலா டிஸ்திறிக் இஞ்சினீர் அவர்கட்கு கந்தோரும் கோச்சிலாயமும் கட்டுகிறதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 6,019. குறிச்சி—லின்டுலா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| M 3 | டிவோன்தோட்டம | தேயிலை | மெஸ் ஜே. டி. வாக்கர் | 0 | 0 | 17·75 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| N 3 | டிவெரன்தோட்டம் | தோட்டத்தெரு | மெண் ஜே. டி. வாக்கர் | 0 | 0 | 4 |
| O 3 | ஷை | தேயிலை | ஷை | 0 | 1 | 21·50 |
| P 3 | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 18 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஆண்டுக் காணி எடுத்துக்கொள்ளுதலைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின்படி பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிப்படுத்திக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவர்களுடைய காரியகாரர்மூலமாய் 1910 ம் ஆண்டு செப்டெம்பர்மாசம் 14 ந் திகதி பகல் 1 மணிக்கு நுவரெலியாக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தங்களுக்கு அக்காணிகளிலுள்ள உடன்படிக்கைகளினது தன்மையையும் அவ்வுடன்படிக்கைகளுக்காய் அவர்கள் சாதிக்கும் உரித்துக்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியாக் கச்சேரி,
1910 ம் ஆண்டு ஜூலை 28 ந் உ.

ஆர். ஈ. ஜி. பெண்டிம்,
உதவி அரசாட்சிஏசெண்டு.

---

[Udapallegama Village, Badulla District.]

1876 ம் ஆண்டு 3 இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வண்டாரவளைக்கும் வெலிமடைக்கும் பாதைபோடுகிறதற்காக என்றும் பரிரங்கத்தேவைக்கு வேண்டியதான பின்வரும் சொல்லப்படும் காணிகள், அதாவது :—

பிரதமபடத்து இல 62. குறிச்சி—உடபல்லேகம கிராமம்.

| துண்டு | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 7 A | குருகந்துதேவத்தை | விதைக்காமல் இருக்கும் சேனை | குணரட்னபண்டாவின் உருத்தாளர் | 0 | 0 | 2¼ |
| 7 B | பத்தலவத்தை | முள்ளுச்செடி இருக்கும் சேனை | படல்கெதற மஹாசெட்டியும் ஈஸ்செட்டியும் | 0 | 0 | 11 |
| 13 B1 | ஷை | ஷை | காலஞ்சென்ற ஆர். டபிள்யு குணரத்னபண்டாரவின் உருத்துக்காரர் | 0 | 0 | 26½ |
| 15 B | அபுகஸ்தென்னேவத்தை | சேனை | கறகொட எந்திறிகஅப்புகாமி | 0 | 0 | 13½ |
| 15 C | ஈம்மாவேவத்தை | செடிகள் உள்ள பத்தனை | காலஞ்சென்ற பரணவெவ்வே லொகுபண்டாவுடைய உருத்துக்காரர் | 0 | 0 | 21 |
| 15 D | ஈம்மாவேவத்தேயன | சேனை | ஷை | 0 | 0 | 25½ |
| 15 E | கல்மெஸ்ஸேயன | சேனை | அசுலுவி அந்தம்பியின் உருத்தாம் | 0 | 0 | 3½ |
| 15 F | ஷை | சேனை | பள்ளேவெல றங்காமி | 0 | 2 | 7 |
| 16 A | குடாவெயேன | கொஞ்சம் கொககட்டிமையும் கித்துல் மரமும் உள்ள சேனை | ஷை | 0 | 2 | 14½ |
| 24 A | ஓம்பொலகொடயத்தன | பத்தனை | தெரியவராது | 0 | 0 | 0½ |
| 25 A | திதிவத்த | செடிகள்உள்ள பத்தனை | ஷை | 0 | 3 | 3 |
| 26 A | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 13½ |
| 27 A | அபுகஸ்தென்னை | சேனை | எல்லேவெலே எல். லூவிஸ் பெரேரு உரித்துச் சொல்லப்படுகிறதாய்ச் சொல்லப்படுகிறது | | 2 | 8 |

பி. ஸ். பி. பி. 63. கிராமம்—மிறிஹாவத்த.

| துண்டு | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 30 A | பல்லேவில | நெல்லு | கம்மல்லனன் அப்பு | 0 | 0 | 0¾ |
| 30 B | ஷை | ஷை | பள்ளேவெல உடுகுமி | 0 | 0 | 1½ |
| 30 C | கந்தகெபுஎல்லேவத்த | சேனை | ஷை | 0 | 0 | 3¼ |
| 33 A | மொரகல்லவத்தேயன | முள்ளுச்செடியுள்ள சேனை | ஜனுயக்க பண்டாரலேக்கம்ம | 0 | 0 | 16 |
| 36 B | மொரகேலவத்த | கோப்பித்தோட்டம் மாமரமும் பிலாமரங்களுமிருக்கின்றது | ஷை | 0 | 1 | 5 |
| 36 C | ஷை | ஷை | மொறம்ஹலவத்தே நந்தா | 0 | 2 | 15 |
| 36 D | மொறஹேலவத்தேயேன | முள்ளுச்செடியுள்ளசேனை | ஷை | 0 | 0 | 11 |
| 37 A1 | ஷை | ஷை | மெதஉல்பொத்தகெதற புஞ்சிரு கமருல | 0 | 0 | 8¾ |
| 37 A2 | மொறஹேலவத்தேயேன அல்லது கம்பாலுவத்தேயேன | சின்னசெடியுள்ள சேனை | ஷை | 0 | 2 | 33 |
| 38 A | பள்ளேவெல ம்புறேயேன | முள்ளுச்செடியுள்ளசேனை | படல்கெதற செத்தி | 0 | 0 | 36½ |
| 38 B | ஷை | ஷை | பள்ளேவெல பாலகுமி | 0 | 0 | 14½ |
| 38 C | வெவிதம்பகொடவத்த | பிலா கோப்பி முதலியவையுள்ள தோட்டம் | பல்லேவெல லொக்குஈங்அப்புவின் உரித்தாளிகள் | 0 | 0 | 10 |
| 38 D | கந்தகபாபுஎல்லேவத்த | பழய பிலா, கித்துல் முதலிய மரங்களுள்ள தோட்டம் | பல்லேவெல ஈங்அப்பு, பல்லேவெல மெனிக்குலயும் பல்லேவெல பாலஹாமியும் | 0 | 1 | 20 |
| 38 E | ஷை | தோட்டம், இப்போதைக்கு சேனை, கித்துள், கொகட்டி மரங்க ளிருக்கின்றது | கம்மலேஈங்அப்பு | 0 | 0 | 38½ |
| 38 F | கந்தகெபுஎல்லேவத் பத்தன | பத்தனையும் காடும் | உருத்தாளிகள் இல்லை | 0 | 0 | 1 |
| 42 A | ஈம்மாவேவத்தை | கைவிடப்பட்ட தோட்டம் இப்போதைக்கு சேனை, 6 பலா, 2 தோடம், 1 மா மரங்களுள்ளது | பல்லேவலே மெனிகஅப்பு, பல்லேவெல பாலகாமி, பல்லேவெல லொகுஈங்அப்பு | 0 | 1 | 2 |
| 42 B | ஷை | கைவிடப்பட்ட தோட்டம் இப்போதைக்கு சேனை, 1 பலா, 1 தோடம் மரங்களுள்ளது | காலஞ்சென்ற பகலவலவ்வே புஞ்சிபண்டாறவுடைய உரித்தாளிகள் | 0 | 0 | 38¾ |
| 42 C | ஷை | காடும் பத்தனையும் | காலஞ்சென்ற பறணவெவ்வே லொகுபண்டாவின் உரித்தாளிகள் | 0 | 0 | 5½ |
| 42D | மஹாவத்த | சேனை கோப்பி இருந்தகாம் | டி. பி திம்புலான | 0 | 3 | 7½ |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டுக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிப்படுத்திக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ஸு அகோஸ்மாதம் 30 ந் திகதியிலன்று பகல் 12 மணிக்கு வெளிமடையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தங்களுக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளை கச்சேரி,
1910 ம் ஸு ஜூலை 27 ந் உ.

சீ. ஆர். கம்பர்லண்ட்,
அரசாட்சி ஏசண்டருக்காக.

[Kirindigala in Meda Korale, Ratnapura District.]

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 4 ம் பிரிவின் பிரகாரம் வலான்கொடையில் தண்ணீர் கொடுத்தல் எனும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 1,956. குறிச்சி—கிரிண்டிகால, மெடகோறளையில்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| E 3 | யட்டியாகெறவா | கெல் | சொமண சாஜு | 0 0 4·38 |
| F 3 | ஷை | மேட்டுநிலம் | செஜே மஷின | 0 0 6·12 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிதும்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய 1910 ம் ஸு புரட்டாதிமாதம் 1 ந் தேதியிலன்று 2 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தங்களுக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1910 ம் ஸு ஆவணி மீ 1 ந் உ.

ஏ. எஸ். ஜூஜேஸ்மென்
அரசாட்சி ஏசண்டுக்காக.

# PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT,

## உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Hambantota, S. O. 49—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1910 ஸு (ஓகஸ்ட்) ஆவணிமாதம் 5 ந் திகதி தொடக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எம். இன்றீவின்சன் அவர் அவர்களிடம் கொழும்புக் கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாகு அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவைகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம். இன்றீவின்சன்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

கூட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்குக் கிறுவாப்பத்து மேற்கைச்சேர்ந்த பன்னேமூலனை என்னும் கிராமத்திலுள்ள இத்துடன் அனைக்கப்படும் *படபிரதியில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 356.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 2 | கெவெல்கார புல்லெனவெல | 1 1 26 | 23a | கல்பொத்தயாவத்த | 0 0 28 |
| 3 | கோங்காபேன | 5 3 21 | 27 | கெற்றகெலகாவதனை | 1 1 5 |
| 3a | வெவ்கிஸ்ம | 0 1 4 | 34 | கெற்றகெலகாயேன, மாறகாகனத்தேயேன, கொடடிகலபேன, றுககேன, தங்காபேன, கோங்காவத்தேகொறட்டுவ | 170 1 0 |
| 3b | வெலகாவத்தை | 0 0 26 | 34b | மயிலகாவத்தயேன | 1 0 15 |
| 3c | மெத்தமண்டிய | 0 2 39 | 34c | மயிலகாவத்தை | 1 3 1 |
| 3d | ஜுஜுகாவத்தை | 1 0 22 | 34d | பெவிகாயேன | 0 1 11 |
| 6 | வெலகாவத்தேயேன | 2 3 36 | 34e | அலுத்வத்தேயேன | 0 2 24 |
| 6a | கொடவாரகொறட்டுவ | 2 2 15 | 34f | கெற்றங்காயேன | 1 0 11 |
| 6h | மெத்தேவத்தை | 0 2 5 | 34g | அலுமதலகாயேன | 1 1 2 |
| 6l | மெத்தேவத்தேகொறட்டுவ | 0 1 25 | 34k | உடவத்தை | 0 2 38 |
| 7 | புலகாகொறட்டுவேயேன | 19 3 31 | 34l | கல்பொத்தயவத்தை | 0 0 36 |
| 7d | மகாவத்தேயேன | 2 0 3 | 37 | கோங்காயேன | 1 3 28 |
| 7e | மாறகாகொறட்டுவ | 0 1 29 | 38 | ஷை | 5 0 9 |
| 7h | பலுகாவேகந்தயேன | 0 3 7 | 41 | மயிலகாகொறட்டுவ | 1 3 17 |
| 8 | அலுத்வெவ | 2 3 14 | | | |
| 10 | பலுகாவெவ அல்லது புல்காவெவ | 3 0 14 | | | |
| 21 | தங்காயேன | 3 1 35 | | | |
| 21a | ஷை | 0 2 26 | | | |
| 21b | ஷை | 1 0 4 | | | |
| 23 | மூலகாவயேன | 2 3 29 | | | 240 3 36 |

எல்லைகளாவன: வடக்கு-மெத்தேமூலனைக் கிராமஎல்லை, கொம்பலகத்தாவக் கிராமஎல்லை; கிழக்கு-அத்தனயாலக் கிராமஎல்லை, பங்கன்விலக் கிராமஎல்லை; தெற்கு-பங்கன்விலக் கிராமஎல்லை, கன்யிஸ்லேவல என்னும் நீரோடை; மேற்கு-மெத்தேமூலனைக் கிராம எல்லை.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 887 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகளை இவ்வறிவித்தலில் நின்று நீக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும் அவைகளின் விசாலத்தொகையாகிய 184 ஏக்கர் 2 றூட் 39 பேர்ச்சும் முன் குறித்த 240 ஏக்கர் 3 றூட் 36 பேர்ச்சுக்குள் அடங்கவில்லையென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 356.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|---|
| 1 .. | கொலொங்காகொறட்டுவ .. | 1 0 38 | 18 .. | தெறுப்பகேவ .. | 1 0 18 |
| 4 .. | லோலுகாவத்தை .. | 0 2 16 | 19 .. | கட்டாடியயிகெலியத்த .. | 0 1 18 |
| 5 .. | அலுத்வெவமுல்ல, வெறலுகஸ்முல்ல, இகலகிஸ்ம, பகலகிஸ்ம, பல்லேபிற்ற, வத்தேகிவத்த, கெகல்காவமுல்ல .. | 55 2 17 | 20 .. | 93,523 ம உரிமைப்படத்தில் காட்டியிருக்குங் காணி .. | 5 2 6 |
| | | | 22 .. | 177,456 ம் உரிமைப்படத்தில் காட்டியிருக்குங் காணி .. | 0 2 17 |
| 6b ..* | கொடவானவத்தை .. | 0 3 11 | 24 .. | 174,982 ம, 174,983 ம், 174,984 ம் உரிமைப்படங்களில் காட்டியிருக்குங் காணிகள் .. | 7 2 18 |
| 6c .. | லோலுகாகொறட்டுவ .. | 0 3 22 | | | |
| 6d .. | வெவகாவமுல்ல .. | 0 0 25 | | | |
| 6e .. | மண்டேமாலுகாவத்தை .. | 0 2 7 | 25 .. | கோங்காகொறட்டுவ .. | 0 3 3 |
| 6f .. | மாறகாவத்தை .. | 1 0 4 | 26 .. | குணேகாமிகேவத்தை அல்லது கெற்றகெலகாகேவ .. | 0 3 23 |
| 6g .. | கொங்காவத்தை .. | 0 2 29 | | | |
| 6i .. | மெத்தேவத்தை .. | 0 1 23 | 28 .. | கெற்றகெலகாகேவ .. | 0 2 18 |
| 6j .. | மகாவத்தை .. | 3 20 | 29 .. | மயிலகாவத்தை .. | 1 2 20 |
| 6k .. | பஙலவத்தை .. | 0 0 11 | 30 .. | இங்கினிகாவத்தை .. | 1 0 35 |
| 6m .. | வெலகாவவத்தை .. | 0 2 7 | 31 • .. | அலுமகலகாவத்தை, கெற்றங்காவத்தை .. | 2 3 19 |
| 6n .. | மாறகாகொறட்டுவ .. | 0 0 33 | | | |
| 6o .. | வெறலுகஸ்முல்லே அத்மகவத்தை .. | 0 1 29 | 32 .. | லோலுகாவத்தை அல்லது கெற்றங்காவத்தை .. | 0 2 12 |
| 7a .. | லோலுகாகொறட்டுவ .. | 0 0 20 | | | |
| 7b .. | கொஸ்காவத்தை .. | 0 2 25 | 33 .. | கெற்றகெலகாவத்தை .. | 1 0 39 |
| 7c .. | மகாவத்தை .. .. | 0 2 22 | 34a .. | வவுலவெவகாவகேவ .. | 0 2 1 |
| 7f .. | வெறலுகஸ்முல்ல, அத்மகவத்தை .. | 0 1 12 | 34g1 .. | அலுமகலகாகேவ .. | 0 0 11 |
| 7g .. | அலுத்வெவமுல்ல அத்மக .. | 1 0 29 | 34j .. | உலுவத்தை .. | 0 0 31 |
| 9 .. | அலுத்வெவமுல்ல அத்மகேவத்தை | 0 3 8 | 35 .. | தங்காகேவ .. | 0 3 0 |
| 11 .. | புள்ளாவெவேலபிம, தலுக்காகொறட்டுவ, கலகேனேவத்தை .. | 60 1 29 | 36 .. | தங்கஸ்கேவ .. | 3 0 17 |
| | | | 39 .. | கொட்டுகலகேனேகபல்ல .. | 2 2 6 |
| 12 .. | இகலபுகாவத்தை .. | 0 2 30 | 40 .. | உலுவத்தை .. | 1 2 36 |
| 13 .. | கலவத்தை .. | 2 0 2 | 42 .. | மயிலகாவத்தை ஒறுவதம்மவெல | 2 0 18 |
| 14 .. | பலுவத்தை .. | 1 0 5 | 43 .. | புள்காகொறட்டுவகேவ .. | 1 0 26 |
| 15 .. | குடியகாலியத்தே அலுகஸ்வெல | 5 0 23 | 44 .. | புள்காகொறட்டுவ .. | 0 1 0 |
| 16 .. | மகலும்புறேவத்தை, அலுகஸ்வெலவத்தை .. | 2 3 0 | 34h .. | மறகாகணத்தேகேவ .. | 0 1 34 |
| | | | 34i .. | பாலுகாவெகொதகேவ .. | 1 1 7 |
| 17 .. | அலுகஸ்வெலவத்தை, கணத்தேவத்தை .. | 4 2 29 | | | 184 2 39 |

3,822

[Anuradhapura, S. O. 26—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றின்மேலாவது பலவின்மேலாவது எவ்வித உடைமையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1910 ம் வருஷம் (ஓகஸ்ட்) ஆவணி மீ 5 ந் தேதி, அவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 முதல 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் யோண் இஸ்றில் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடமையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டெழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

யோண் இஸ்றில்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகாம்பளாத்தை . வில்லாச்சியக்கோறளையைச்சேர்ந்த பெரியஆவரம்பிட்டி என்னுங் கிராமத்திலுள்ள இத்துடன் இணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—ரொப்போ படம் 2.

| காணித்துண்டு. | காணியின் பெயர் | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 225 .. | பெரியஆவரம்பிட்டிக்கமம் .. .. .. | 16 2 1 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்குந் தெற்கும் மேற்கும் பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட பெரிய ஆவரம்பிட்டிக்காடு (காடு).

II.—ரொப்போ படம் 2.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 226 .. | பெரியஆவரம்பிட்டிக்குளம் .. .. .. | 19 3 24 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்குந் தெற்கும் மேற்கும் பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட பெரியஆவரம்பிட்டிக்காடு (காடு).

3,623

* இங்கிலீசின் நான்காம் பாகம் 886 & 888 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[Tenders for the purchase of Salt at Matalan.]

இத்தால் சகலரும் அறியவும் இவ்வாண்டு வடமாகாண முல்லைத்தீவு பகுதியைச்சேர்ந்த மாத்தளன் உப்பளத்தில் சேர்க்கப்படும் ஏறக்குறைய 5,000 அந்தர் உப்பை சாக்குடன் விலையாக கொள்ள விரும்புவோர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

2. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இணைப்பிரதிகளாக ஒட்டி முத்திரை வைத்து மேல்விலாச மிட்டிருக்கவேணும்.

(a) மூலப்பிரதியில் வட மாகாணம் கவுண்மேந்து ஏசன்றுவுக்கு என்று மேல்விலாச மெழுதுக.

(b) இணைப்பிரதியில் கொழும்பு அரசிறை வருமான காரியஸ்தருக்கு என்று மேல்விலாச மெழுதுக.

3. மாத்தளன் உப்பு விலையாக கேட்கும் கேள்விப் பத்திரமென்று உறையின் இடதுபக்க மேல்மூலையில் எழுத வேண்டும். 1910 ம் ஆண்டு ஆவணிமாதம் 16 ந் தேதி செவ்வாய்க்கிழமை மத்தியானத்திற்குமுன் கவண்மேந்து ஏசண்டர் கந்தோரிலும், அரசிறைவருமான காரியஸ்தர் கந்தோரிலும் சேரவேண்டியது.

4. கேள்விப்பத்திரம் அதற்கென்று அச்சடிக்கப்பட்ட கடதாசியில் எழுதவேணும். அக்கடதாசிகள் யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அப்படியான கடதாசியில் எழுதாத கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படமாட்டா.

5. கேள்விப்பத்திரக் கடதாசிகள் பெற விரும்புவோர் கச்சேரியில் ரூபா 100 கட்டி பற்றிச்சீட்டைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கவுண்மேந்து ஏசண்டினால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் அறிவிக்கப்பட்டு பத்து நாளைக்குள்ளாகப் போதிய பிணை கொடுக்கத் தவறினால் அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுத்தால் கட்டப்பட்ட காசு பறிமுதலாக்கப்படும்.

6. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான மனுஷர் பிணை நிற்பாரென்று சம்மதங்காட்டும் பத்திரம் அனைத்திருக்க வேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்கவேணும்.

7. கேள்விப்பத்திரத்தில் (1) உப்பை மாத்தளனிலிருந்து எவ்வளவு காலத்திற்குள் ஏற்றப்படுமென்றும்; (2) சாக்கின் விலை பிறம்பாக உப்பின் விலை ஒரு அந்தருக்கு இன்னதென்றும் கேள்விப்பத்திரத்தில் காட்டப்பட வேண்டும். சாக்குகளின் விலை கவண்மேந்துவுக்கு சென்றவிலையில் அரைவாசி யிறுக்கவேண்டும்.

8. ஒவ்வொரு ஒப்பந்தகாரனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேணும்.

9. மேற்சொல்லியவைக்கேற்க எழுதப்படாத கேள்விப் பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டா.

10. எந்தக் கேள்விபத்திரத்தையும் அல்லது எல்லாவற்றையும் ஏற்க அல்லது நியாயம் சொல்லாது மறுக்க முழு உரித்தும் கவண்மேந்துக்கு உண்டு.

எம். றீ. ஆர்ச்சிபோல்ட்,
கவண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1910 ம் ௵ ஆடிமீ 12 ந் உ.

---

[Tenders for the Transport of Salt to Udappu.]

1910 ம் ஆண்டு ஐப்பசிமீ 12 ந் தேதி அவங்கி 1911 ம் ஆண்டு சித்திரைமீ 25 ந் தேதிவரைக்கும் மீனுணர்த்துங்காலங்களில் புத்தளம் உப்புக் குதங்களிலிருந்து உப்பு ஏற்றுமதிபண்ணிக்கொண்டுபோய் உடப்பு குதத்துக்கு நிறுத்து நிறைத்துக் கொடுக்கிறதற்கென்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களால் 1910 ம் ஆண்டு ஆவணி மாதம் 8 ந் தேதி பகல் 11 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்காரன் இதன் பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டும் :—

(a) கேள்விக்காரன் 1910 ம் ஆண்டு ஆவணிமாதம் 8 ந் திகதிக்கு முன்னே புத்தளம் கச்சேரியில் ரூபாய் 10 (பத்து) கட்டவேண்டும். நியமிக்கும் ஞாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக் கட்டின் பணம் கொவர்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

(b) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சுங்கைபோக்கு வருமான விசாரணைத் தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரை யவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

(c) கொந்தீர் அல்லது கடிதங்களை பெற்றுக்கொள்வதற்காக கேள்விக்காரர் தங்களுடைய பெயரையும் தாங்களிருக்கு மிடத்தையும் புத்தளத்தில் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

(d) புத்தளத்திலிருந்து 250 அந்தர் உப்பு ஏற்றி உடப்புக்குப்போகும் ஒவ்வொரு போட்டுக்கும் என்ன கூலியென்று கேள்விக்காரர் காட்டியிருக்க வேண்டியது.

(e) யாதாமொரு அல்லது எல்லாக் கேள்விப் பத்திரங்களையும் விலக்கும்பொருட்டு ஓர் தத்துவத்தை கவர்ணமேந்துக்கே வைத்துக்கொள்ளப்படும்.

(f) பாரங்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் தன் பொருத்தத்தைச் சர்வ நிறைவேற்றுவதாக 500 ரூபாவுக்கு பிணை கொடுக்கவேண்டும்.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களை உப்புத் துரையவர்களிடம் விசாவி அறிந்து கொள்ளலாம்.

ஜே. ஆர்தர் டெ சில்வா,
உதவி ஏசன்றுக்காக.

புத்தளக் கச்சேரி,
1910 ம் ௵ ஆடிமீ 21 ந் உ.

---

[Tender for Toll Rents, Jaffna.]

இத்தாலறியப்படுவது வட மாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணம் கச்சேரியில் பின்னால் சொல்லப்படும் துறைஆயக் குத்தகைகளை 1911 ம் ௵ ஜனவரிமாதம் 1 ந் தேதி தொடக்கமாகப் பன்னிரண்டு மாதத்துக்கு விலைக்கு வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1910 ம் ௵ செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 15 ந் தேதி வியாழக்கிழமை மத்தியானம் 12 மணி யளவில் ஏற்கப்படும் :—

1. புண்ணைத்துறை. | 3. காரைதீவு.
2. அராலித்துறை. | 4. மன்னார்.

மேற்சொல்லிய ஒவ்வொரு குத்தகைக்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரம் அனுப்பப்பட வேண்டும்.

பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபடவேண்டும். தபால்வழியாய் அனுப்பப்படுபவையும் குறித்த நேரம் தேதியின்பின் கிடைக்கப்படுபவையும் கவனிக்கப்படா.

ஒப்புக்கொள்ளப்படுங் கேள்விக்காரன் கேள்வித்தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண்டும். உத்தம தேசாதிபதி யவர்களால் கேள்வி ஏற்கப்பட்டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 30 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதிபெற்ற ஆதனப்பிணையேனும் காசாய்க் கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கு பிணையேனும் கட்டவேண்டும்.

முடிக்குரிய தாணி பிணையாய்க் கொடுபடும் உறுதிமுதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதி போடுவதற்கும் உரிய செலவும் ஆதனங்களை விலைமதித்தல் பிணை உறுதி பதிவுசெய்தல் முதலியவைகளால் வரும் செலவும் கேள்விக்காரன் கட்டவேண்டும்.

பிணையாய்க் கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடு முதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில நிலப்பதிவுக் கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

யாழ்ப்பாண ஏசண்டரிடம் அல்லது மன்னார் உதவி ஏசண்டரிடம் தேவையானால் மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத்தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

எம். றீ. ஆர்ச்சிபோல்ட்,
அரசாட்சி ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1910 ம் ௵ ஆகஸ்டுமீ 1 ந் உ.

[Tender for Jurors, Fiscal's Office, Batticaloa.]

ஜூரித்துரைமக்களாக இருக்கத் தகுந்தவர்களினதும, தங்களுடைய நாமங்களை ஜூரிடாப்பிற் சேர்க்க விருப்பமானோர்களினதும் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறேனென்ன இத்தாற் சகலருக்கும் அறிவிக்கின்றேன்.

இதன்பின்வருங் காணப்படுமவர்கள் ஜூரி டாப்பிலிருந்து கழிக்கப்பட்டவர்கள் :—

1. டிஸ்திறிக் நீதவான், பொலிஸ் நீதவான், றெக்குவஸ் கோட்டு நீதவான் வேலைகளைச் செய்கிறவர்கள்.

2. பிஸ்கால் உத்தியோகஸ்தர்கள்.

3. அட்டாத்து விசாரணைக்காரர்கள்.

4. கிராமக்கோட்டு நீதவான்மார்.

5. கடமைகளை நடத்தும் அப்புக்காத்துமார், தரணிமார்.

6. வேறு உத்தியோகஸ்தர், ஆறு காட்டிகள், பொலீசர் அல்லது வேறு, பொலிஸ் வேலைகளைச்செய்து சம்பளம் வாங்குபவர்கள்.

7. பிட்டிசம் எழுதுகிறவர்கள்.

8. பூசாரிமாரும், பலசமய குருமாரும்

9. கோட்டுத்தியோகஸ்தரும்.

10. அட்டோணிஜெனறல், சொலிசிற்றர் ஜெனரல், மறியல்வீட்டு பெரிய தரிசனைகாரன்.

11. மறியல் இருந்தவர்கள்.

12. சரீரத்தில் அல்லது மனதில் ஏதும் குறையிருக்கிறவர்கள், அல்லது வேத கருமங்களில் தங்கள் மனதைச் செலுத்தி ஜூரிமாக அல்லது மத்திட்சராக இருக்கக்கூடாதவர்கள்.

ரீ. சின்னத்தம்பி,
கீழ்மாகாண பிஸ்கால் துரைக்காக.

மட்டு பிஸ்காலாபீஸ்,
1910 ம் ஆண்டு ஆடிமீ 28 ந் உ.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.